## NEWS CLIPPING

| | |
|---|---|
| Headline: | **Reading Corners for Batu Caves Tamil School students by GAB Foundation** |
| Publication : | **Tamil Nesan** |
| Section : | **General News** |
| Page : | **-** |
| Date : | **27 February 2011** |



ரேணுகா இந்திரராஜா.

# பத்துமலைத் தமிழ்ப்பள்ளியில் ஜி.ஏ.பி அறவாரியத்தின் வாசிப்புக் கூடம்

**பத்துகேவ்ஸ், பிப்.27** தமிழ்ப்பள்ளி மாணவர்களிடையே ஆங்கில ஆற்றலை வலுப்படுத்துவதில் முனைப்போடு செயல்பட்டிடும் ஜி.ஏ.பி அறவாரியம் நேற்று பத்துமலை வளாகத்தில் தமது நடவடிக்கையை தொடங்கியது.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, கல்வி மற்றும் சமூக வளர்ச்சிக்கான சேவைத் திட்டங்கள் என்ற மூன்று நிலைப்பாடுகளை முதன்மையாகக் கொண்டு கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்னர் கின்னஸ் எங்கர் பெர்ஹாட் நிறுவனத்தால் அமைக்கப்பட்டதே இந்த ஜி.ஏ.பி. சமூக மக்கள் எதிர்நோக்கிடும் பிரச்னைகளை தீர்ப்பதற்காக இது தோற்றம் கண்டது. டத்தோ மகாதேவ் சங்கரால் தோற்றுவிக்கப்பட்ட இந்த அறவாரியம் கல்வி அடிப்படையிலான சேவைகளிலும் அண்மைய காலமாக முழு முனைப்போடு செயல்பட்டு வருகிறது.

அந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில தமிழ்ப் பள்ளிக்கூடங்களில், மாணவர்களின் ஆங்கில மொழி ஆற்றலை வெளிப்படுத்துவதற்காக கடந்த ஆண்டு முதல் சிறந்த பல திட்டங்களையும் ஜி.ஏ.பி செயற்படுத்தி வருகிறது. சிறார் கல்வித் திட்ட நிபுணர்கள், சிறந்த கல்வியாளர்களைக் கொண்டு இந்த திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக ஜி.ஏ.பி அறவாரியத்தின் நிர்வாக செயல்குழு இயக்குநர் ரேணுகா இந்திரராஜா தெரிவித்தார்.

தமிழ்ப்பள்ளிக் கூடங்களில் சிறந்த கல்வி ஆற்றலை வெளிப்படுத்திடும் மாணவர்கள் இடைநிலைப்பள்ளிக்குச் சென்றவுடன் கல்வியில் பின்னடைவை எதிர்கொள்வதற்கான முக்கிய காரணம் ஆங்கில மொழி ஆற்றலின்மையே என்று அறியப்பட்டுள்ளது. 70 விழுக்காடு தமிழ்ப்பள்ளி மாணவர்கள் இடைநிலைப் பள்ளி கல்வித் தேர்ச்சியில் பின்தங்குவதற்கு மிக முக்கிய காரணம் ஆங்கில மொழியில் புலமையற்றிருப்பதே என்று ஆய்வுகள் காட்டுகின்றன.

இந்த நிலையை அகற்றி, ஆங்கில மொழி ஆற்றலிலும் சிறந்தவர்களாக தமிழ்ப்பள்ளி மாணவர்களை வளப்படுத்த ஜி.ஏ.பி.யின் சேவை முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட சில பள்ளிக்கூடங்களில் வாசிப்புக் கூடங்களை அமைத்து, அங்கு மாணவர்கள் பயில ஆங்கில மொழியிலான கதை, கட்டுரை உள்ளிட்ட வாசிப்புப் புத்தகங்களையும் ஜி.ஏ.பி. வழங்குகிறது. இப்படி அமைக்கப்பட்ட ஜி.ஏ.பி. வாசிப்புப் பகுதிகளில் மாணவர்களுக்கு வழிகாட்டவும் கற்பிக்கவும் தொண்டூழிய அடிப்படையில் பலர் சேவையிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் உயர்கல்விக் கழகங்களில் பட்டப் படிப்பு பயிலும் மாணவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

கடந்த ஆண்டு மொத்தம் 16 பள்ளிக்கூடங்கள் இந்த நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டன. ஆரம்பத்தில் யு.பி.எஸ்.ஆர். மாணவர்களின் ஆங்கில கல்வி ஆற்றலுக்கு ஊக்கமளிக்கப்பட்டது. தற்போது ஒன்றாம் வகுப்பு முதலே இதற்கான அஸ்திவாரத்தை இட ஆரம்பித்திருக்கிறது ஜி.ஏ.பி. இது தவிர்த்து மாணவர்களின் ஆங்கில மொழி பேச்சாற்றலை வலுப்படுத்துவதற்கு 21 நாள் ஆங்கில முகாமும் இந்த அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. நாடளாவிய நிலையில் ஜி.ஏ.பி.யின் செயல் திட்டங்கள் பள்ளிக்கூடங்களில் மேம்படுத்தப்பட்டு வருவதாக ரேணுகா கூறினார். இது தவிர்த்து பி.எம்.ஆர். மற்றும் எஸ்.பி.எம் தேர்வு எழுதவிருக்கும் மாணவர்களுக்கு தன்முனைப்பு தூண்டுதல் பயிற்சி முகாமும் இந்த அமைப்பு வழங்குவதாக அவர் கூறினார்.

பத்துகேவ்ஸ் தமிழ்ப்பள்ளிக் கூடத்தில் அமைக்கப்பட்ட ஜி.ஏ.பி வாசிப்புக் கூடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்றாமாண்டு மாணவர்களான பா.தேவேந்திரன், அ.ஸ்ரீராஜ் குமார், மொ.மதன், ச.சர்வேஸ்வரா, நா. கௌசல்யா, வி.ஜனனி மற்றும் கோ.நரேன் ஆகியோரின் ஆங்கில வளப்பயிற்சிக்கு ரேணுகா வழிகாட்டுவதை படத்தில் காணலாம்.

மாணவர்களுக்கு தொண்டூழிய சேவையினர் ஆங்கிலம் போதிக்கின்றனர். (படங்கள் : எஸ்.எம்.சுந்தர்)